# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

# ADMINISTRATIVE MANAGEMENT THEORIES IN SANGAM LITERATURE



பதிப்பாசிரியர்

**முனைவர் க. முருகேசன்**

# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

**(தேசியக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | **முனைவர் க. முருகேசன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட், 2017 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 610 - 626 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 85267 - 35 - 2**


## Administrative Management Theories in Sangam Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan** |
| Copyright's | : | Editor |
| First Edition | : | August, 2017 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 610 - 626 |
| Prize | : | **Rs. 400/-** |

16. **முனைவர் கோ. இராமச்சந்திரன்** 89
சங்க இலக்கியங்களில் நிர்வாக மேலாண்மை

17. **முனைவர் மு. நாகராஜன்** 95
நிர்வாகவியல் நோக்கில் செங்குட்டுவனின் புத்திக்கூர்மையும் பரணரும்

18. **முனைவர் ஆர். நிர்மலா தேவி** 101
இலக்கியங்களில் அரசனின் நிர்வாக நெறி

19. **முனைவர் அ. அருள்சீலி** 107
சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை

20. **இரா. சரஸ்வதி** 114
புறநானூறு உணர்த்தும் அரசியல் கோட்பாடுகள்

21. **முனைவர் சு. இராமதிலகம்** 121
சங்க இலக்கியத்தில் - அரசு நிர்வாகம்

22. **முனைவர் கோ. சுரேஷ்** 127
புறநானூற்றில் ஆட்சி நிர்வாகமும் போர் மரபுகளும்

23. **முனைவர் கூ. முத்தையன்** 134
சங்க இலக்கியத்தில் வணிக மேலாண்மை

24. **திருமதி. ஆ. தனுசு இராமச்சந்திரன்** 139
நற்றிணையில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

25. **முனைவர் நயம்பு. அறிவுடை நம்பி** 144
புறநானூற்றில் அரசு நிர்வாகவியல்

26. **முனைவர் சா. நீலகண்டன்** 151
பட்டினப்பாலையின் மேலாண்மைச் சிந்தனைகள்

27. **முனைவர் மு. பழனியப்பன்** 156
முல்லைப்பாட்டில் காணலாகும் மேலாண்மைச் செய்திகள்

28. **ம. காயத்ரி** 161
புறநானூற்றில் நேரமேலாண்மை

29. **முனைவர் ப. சுமதி** 166
பட்டினப்பாலை சுட்டும் நிர்வாகவியல் சிந்தனைகள்

30. **முனைவர் கடவூர் மணிமாறன்** 172
புறநானூறு புலப்படுத்தும் படைமறமும் கொடைத்திறமும்

31. **அ. காயத்ரி** 179
சங்க இலக்கியங்களில் போர் மேலாண்மை

32. **தி. முத்துலட்சுமி** 185
சங்க காலத்தில் அரசு நிர்வாகம்

# 17. நிர்வாகவியல் நோக்கில் செங்குட்டுவனின் புத்திக்கூர்மையும் பரணரும்

**முனைவர் மு. நாகராஜன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

கல்வி அழகே அழகு என்பதை நாம் மறக்கக்கூடாது. கல்வியினால் உண்டாகும் பயன் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். வாழ்வில் உண்டாகும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை அறிய இயலாமல் இன்றைய சமுதாயம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அன்றைய காலகட்டத்திலே வாழ்ந்த குட்டுவன் அறிவில் சிறந்து விளங்கினான். தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் வாழ்ந்த மனிதர்களுக்கு உண்டாகக் கூடிய சிக்கலை எளிமையாகத் தீர்த்தான். அவனது புத்திக்கூர்மையும் நிர்வாகவியல் சிந்தனையும் வியப்பை உண்டாக்குகிறது.

கஞ்சி குடிப்பதற்கோர் வழியுமில்லை எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றான் பாரதி. குழந்தைக்கு பசி ஏற்பட்டால் தான் உண்ணாமல் குழந்தையின் பசியைப் போக்கினாள் மறக்குடியில் பிறந்த தமிழச்சி. செங்குட்டுவனும் தமிழச்சியின் வாரிசு என்பதை பரணர் பாடல்கள் உணர்த்துகிறது. ஏனெனில் போர்க்களத்தில் உள்ள வீரர்களின் பசியைப் போக்கியருளிய குட்டுவனின் செயல் பாராட்டிற்குரியது.

## ஆண்யானையும் செங்குட்டுவனும்

செங்குட்டுவன் குதிரையைச் செலுத்தும் வேகத்தால் எழும் காற்றினால் கடல் அலை வருந்திச் சிறு சிறு திவலைகளாக உடைகின்றன. இளையவர் யாழ் வாசித்து கடவுளை வணங்குகின்றனர். அப்பாட்டொலியை மறத்தையுடைய புலிக்கூட்டத்தினது குரலெனக் கருதி வலிமையுடைய ஆண்யானை பக்கமலையைப் பொருந்தி வளர்ந்த ஒளிவிடும் பூக்களையுடைய வேங்கை மரத்தினது அழகுடைய பெரிய கிளையினை வளைத்துப் பிளந்து கரிய பெரிய தலையில் அழகு பெறச் சூடி வருகிறது. அது திரளுதல் பொருந்திய பகைவர் மேல் செல்கின்ற படைவீரர் தண்டையுடைய வெற்றியையுடையவராகிப் போரை ஏற்றுக் கொண்டு ஆரவாரித்தாற் போல இருக்கிறது. மேலும் சுரபுன்னைகள் நெருங்கி வளர்ந்த அகன்ற காடு எதிரொலி செய்யும்படி முழங்குகிறது. மழை பெய்தல் நீங்கியதால் மூங்கில் வாடிய அரிய வழிகள் ஒன்று இரண்டல்லாதனவாகிய பலவற்றைக் கடந்து வந்து திண்ணிய தேரை உடைய பழியில்லாத நெடுந்தகையே, நின்னைக் காணும் பொருட்டு வந்தேன் என்பதை பரணர்,

*"மறப்புலி குழூஉக்குரல் செத்துஇ வயக்களிறு*
*வரை சேர்பு எழுந்த சுடர் வீ வேங்கைப்*
*பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து தன்*
*மா இருஞ் சென்னி அணி பெற மிலைச்சி'*

*(பதிற்றுப்பத்து, பா.41)*

என்னும் பாடலில் பதிவாக்கியுள்ளார்.